මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
Media Freedom Rights Monitoring Report

FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

MFRMD

2021 டிசம்பர்

தொகுதி 12



ரஞ்சன் ராமனாயகவின் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் தீர்மானித்துள்ளது.



ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்து தொடர்பில கைது செய்யப்பட அசாத் சாலி அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டார்.



கவிஞர் அஹ்னாப் ஜசீம் 18 மாதங்களின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

# கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான தடைகளை முறியடிப்போம்

**'மனித சுதந்திரம் தொடர்பான சுட்டெண்ணில் / குறிகாட்டியில் மிகப் பெரிய சரிவைச் சந்தித்த குறிகாட்டி கருத்துச் சுதந்திரம் ஆகும்**

'CATO Institute - 2021 Human Freedom Report' 29 **பக்கம்**

கருத்துச் சுதந்திர உரிமையைப் பல்வேறு வழிகளில் அனுபவிக்க அல்லது பயன்படுத்த உலகவாழ் ஒவ்வொரு மனிதனுக்கும் எவராலும் மறுக்க முடியாத உரிமை காணப்படுகின்றது. அதன் ஊடாகத் வாழ்க்கை தரம் சார்ந்து காணப்படும் உரிமைகள் மட்டுமல்ல, சமூகத்தின் ஜனநாயகமும் உறுதி செய்யப்படுகின்றது. கருத்து சுதந்திரம், நிறுவன சுதந்திரம் மற்றும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு குறித்து சுதந்திர ஊடக இயக்கம் கடந்த வருடத்தில் மேற்கொண்ட 100க்கும் மேற்பட்ட அவதானிப்புகளை ஆராயும்போது, இலங்கையர்களும் கருத்து சுதந்திரத்தை அனுபவிப்பதில் பல பிரச்சினைகளை எதிர்கொள்வது தெளிவாகின்றது. குறிப்பாகக் கோவிட் தொற்றுநோய் மற்றும் நாளுக்கு நாள் வளர்ந்து வரும் சமூக-பொருளாதார நெருக்கடியின்போதும், குடிமக்களின் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையை மீறும் முயற்சிகளைக் காணமுடிகிறது.

தற்போதுள்ள சட்டங்களைத் துஷ்பிரயோகம் செய்வதன் ஊடாக இந்த அடிப்படை உரிமை மீறல்களைச் செய்வது அரசாங்கத்தின் உத்தியாகக் காணப்படுகின்றது. ஆகவே, சுதந்திர ஊடக இயக்கம், பரவலாகப் பயன்படுத்தப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது. அதேபோல மக்களின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க அனைத்துலக குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை (ICCPR) சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு சுதந்திர ஊடக இயக்கம் பலமுறை அரசுக்கு அழைப்பு விடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். 2022ஆம் ஆண்டை அதாவது புத்தாண்டை இதுபோன்ற தடைகளைத் தாண்டிச் செல்வதற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆண்டாக மாற்றுவது மனித சுதந்திரத்தை மதிக்கும் அனைவரினதும் பொதுப் பொறுப்பாகும்.

**சுதந்திர ஊடக இயக்கம்**

**ஊடக சுதந்திரம் குறித்து டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் மற்றும் முந்தைய நிகழ்வுகளின் பின்தொடர்வுகள் தொடர்பில் சுருக்கமான முறையில் கண்காணித்து இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த அறிக்கையானது ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் பேச்சு உரிமை, கருத்துரிமை தொடர்பான பிரச்சினைகள், புதிய சட்ட உருவாக்கம் மற்றும் சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகள் தொடர்பாகவும் கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதிகூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 16 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் டிசம்பர் 2021 அறிக்கையில் உள்வாங்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 3 சம்பவங்கள், ஊடக சுயாதீனத்துவம் தொடர்பான 1 சம்பவம், சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 6 சம்பவங்கள், கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் உட்பட்ட 5 சம்பவங்கள் மற்றும் நிபுணத்துவம் தொடர்பான ஒரு சம்பவம் போன்றவை உள்ளடங்குகின்றன.**

## டிசம்பர் மாதத்தில் அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள்:

1. பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்த கருத்து காரணமாக அவர் சிறையில் அடைக்கப்பட்டதன் விளைவாக அவரது உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகப் அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் தீர்மானித்துள்ளது.
2. ரிசாத் பதியுதீனின் கைது தொடர்பில் அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் தனது அவதானத்தை செலுத்தியுள்ளமை.
3. பொலிஸ் உத்தியோகத்தர்களின் பணி துஷ்பிரயோகம் தொடர்பில் முறைப்பாடொன்றை மேற்கொள்ளச் சென்ற உதயன் பத்திரிகையின் பருத்தித்துறை நிருபர் ஜெயச்சந்திரன் சுலக்ஷனை பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அச்சுறுத்தியமை.
4. ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தி மத, இன பேதங்களைத் தோற்றுவிக்கும், வன்மத்தை தூண்டும் வகையில் கருத்து வெளியிட்டதாகக் கூறி மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலிக்கு எதிராகப் பயங்கரவாத தடுப்புச் சட்டம் மற்றும் ICCPR சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கின் அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் அவரை விடுவித்து விடுதலை செய்யக் கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்பளித்தமை.
5. கவிதைத் தொகுப்பை வெளியிட்டதற்காகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 18 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னாப் ஜஸீமுக்கு மேல் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டுள்ளமை.
6. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து கைதிகளின் விவரங்களையும் வழங்குமாறு மனித உரிமை ஆர்வலர்கள் சிலர் தகவலறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளமை.
7. சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கண்டி மனித உரிமைகள் காரியாலயத்தினால் நடத்தப்படவிருந்த நினைவேந்தல் கூட்டம் பொலிஸாரால் பெறப்பட்ட நீதிமன்ற உத்தரவினால் தடைசெய்யப்பட்டமை.
8. உள்நாட்டு மனித உரிமை ஆணைக்குழுவிற்கான ஐக்கிய நாடுகளின் நிறுவனமான (GANHRI) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை A தரத்திலிருந்து B தரத்திற்கு தரமிறக்கியுள்ளமை.
9. லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் கீர்த்தி ரத்நாயக்கவை எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம்உத்தரவிட்டமை. .
10. சுதந்திர ஊடக இயக்கத்தின் தலைமையில் "உயர் தொழில்முறை பயிற்சியுடன் டிஜிட்டல் ஊடகவியலாளருக்கான நெறிமுறைகள்குறித்த ஒருமித்ததொறு அடிப்படை ஒப்பந்தத்தை உருவாக்கியமை மற்றும் டிஜிட்டல் ஊடகவியலாளர்களை ஒன்றிணைத்தல் திட்டத்தை ஒழுங்கமைக்கத்தல் "போன்ற டிஜிட்டல் ஊடகவியலாளர்களின் உரிமைகள் தொடர்பான அடிப்படை நடவடிக்கைகள் ஆரம்பித்துவைக்கப்பட்டமை.
11. இலங்கை தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி உபாலி அபேரத்ன நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒன்பது சிவில் சமூக அமைப்புகள் அறிக்கையொன்றைவெளியிட்டமை..
12. தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் உத்தரவுக்கு இணங்காத பொலிஸ் தலைமையகம் மற்றும் 03 பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்களின் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு பொலிஸ் தலைமையகத்திற்கு தெரிவித்துள்ளமை.
13. அரச புலனாய்வுப் பிரிவினரால் கண்காணிக்கப்பட்டு வரும் அனித்தா பத்திரிகையின் பிரதிப் பிரதம ஆசிரியரும் செய்தி ஆசிரியருமான லசந்த ருஹுனுகே தொடர்பான சம்பவத்தை உரிய விசாரணை நடத்துமாறு இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளமை.
14. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டை மீளப் பெறுமாறு கோரி அக்கரைப்பற்று பொலிஸ் அதிகாரி ஒருவர் சுதந்திர ஊடகவியலாளரான அப்துல் ரஹீம் சஹீர் அஹமட்டை அச்சுறுத்தியமை.
15. லேக் ஹவுஸ் டிஜிட்டல் ஊடக பிரிவின் தலைவர் மஞ்சுள சமரசேகரவை காரணமின்றி பணி இடைநீக்கம் செய்தமை குறித்து சுதந்திர ஊடக இயக்கம், வெகுசன ஊடக அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளமை.
16. ஆபாச பிரசுரங்களை தடை செய்யும் சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ரத்து செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த நிகழ்வுகளின் எண்ணிக்கை – 2021 டிசம்பர் மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிக்கூறுகள் | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 03 |
| ஊடக சுயாதீனத்துவம | 01 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 06 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 05 |
| நிபுணத்துவம் | 01 |
| **மொத்தம்** | **16** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மனரீதியாக ஒர்முகப்படுத்தி சுயாதீனமாக தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளில் எதிர்விளைவுகளை அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்நோக்காமல் சுதந்திரமாக தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இந்த முக்கிய சுதந்திர குறிகாட்டிகள்மீறப்பட்ட மூன்று சம்பவங்கள் டிசம்பர் மாதத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளன.**

**அட்டவணை 2: 2021 டிசம்பர் மாதம்: ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் 03**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 03 |
| **மொத்தம்** | **03** |

1. **பொலிஸ் உத்தியோகத்தர்களின் பணி துஷ்பிரயோகம் தொடர்பில் முறைப்பாடொன்றை மேற்கொள்ளச் சென்ற உதயன் பத்திரிகையின் பருத்தித்துறை நிருபர் ஜெயச்சந்திரன் சுலக்ஷனை பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அச்சுறுத்தியமை.**

   பொலிஸாரின் முறைகேடு தொடர்பாகக் கடைக்காரர் ஒருவர் தெரிவித்த தகவல் தொடர்பில் ஊடகவியலாளர்குறித்த பொலிஸ் அதிகாரியிடம் வினவியபோது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் தொடர்பில் ஊடகவியலாளர் காவல்துறை பொறுப்பதிகாரியிடம் முறைப்பாடு மேற்கொள்ளச் சென்ற போதே இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. குறித்த ஊடகவியலாளருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.ஊடகக் கழகத்தை மேற்கோள்காட்டி லீடர் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

   ஆதாரம்: https://theleader.lk

2. **அரச புலனாய்வுப் பிரிவினரால் கண்காணிக்கப்பட்டு வரும் அனித்தா பத்திரிகையின் பிரதிப் பிரதம ஆசிரியரும் செய்தி ஆசிரியருமான லசந்த ருஹுனுகே தொடர்பான சம்பவத்தை உரிய விசாரணை நடத்துமாறு இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம் பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளமை.**

   அனித்தா பத்திரிகையின் பிரதி ஆசிரியரும் செய்தி ஆசிரியருமான லசந்த ருஹுனுகேவை அரச புலனாய்வுப் பிரிவினர் பின்தொடர்வதாகச் சந்தேகம் வெளியிட்டுள்ள இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கம், இது தொடர்பில் உடனடி விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

   பொலிஸ்மா அதிபர் சி.டி விக்ரமரத்தினவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி குறித்த தொழில்சங்கம் குறிப்பிடுவதாவது, 077 3037462 என்ற தொலைபேசி இலக்கத்திலிருந்து தவறிய அழைப்புகள் தொடர்ந்து ஊடகவியலாளரான லசந்த ருஹுனுகேவிற்கு மேற்கொள்ளப்படுவதாகவும், மேலும் அவர் பயணிக்கும் இடங்களைப் பின்தொடர்வதாகச் சந்தேகம் காணப்படுவதாகக் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் குறித்த கடிதத்தின் பிரதி வெகுசன ஊடக அமைச்சரிற்கும் பெயரிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

   ஆதாரம்: https://www.citizen.lk

3. **இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டை மீளப் பெறுமாறு கோரி அக்கரைப்பற்று பொலிஸ் அதிகாரி ஒருவர் சுதந்திர ஊடகவியலாளரான அப்துல் ரஹீம் சஹீர் அஹமட்டை அச்சுறுத்தியமை.**

கடந்த செப்டெம்பர் மாதம் பொலிஸாரின் தாக்குதல் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்த முறைப்பாட்டை மீளப் பெறுமாறு வற்புறுத்திச் சிவில் உடையில் இருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் குறித்த ஊடகவியலாளரைஅச்சுறுத்தியுள்ளார்.

பணிக்காக வீட்டிலிருந்து வெளியேறியபோது உரியமுறையில் முகமூடி அணியவில்லை என்று அவர்மீது குற்றம்சாற்றி செப்டெம்பர் 02 ஆம் திகதி சில பொலிஸ் அதிகாரிகள் அவரைத் தாக்கி ஒளிப்பதிவு கமராவை தாக்கியமை தொடர்பில் ஊடகவியலாளர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்திருந்தார்.

ஆதாரம்: https://theleader.lk

## ஊடக சுயாதீனத்துவம்

**ஊடக சுயாதீனத்துவம் என்பது ஊடக சுதந்திரத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். ஊடக நிறுவனங்களுக்குள் ஊடகவியலாளர்களின் சுயாதீனத்துவம், ஆசிரியர் சபை சுயாதீனத்துவம், அரசியல்வாதிகள், வணிகரீதியான பலம்வாய்ந்தவர்கள் மற்றும் மதத் தலைவர்கள்களிடம் இருந்து ஊடக சுயாதீனத்துவம், வியாபார விளம்பரங்கள் பெற்றுத்தருதல் அல்லது பெற்றுத்தராமல் இருப்பதன் ஊடாக ஊடக சுயாதீனத்துவத்தை தாக்கத்திற்கு உள்ளாக்குதல்,இணைய வசதி அல்லது உரிமம் அளிப்பவரின் ஊடாக ஊடக உள்ளடக்கங்களில் தாக்கத்தை மேற்கொள்ள முயற்சித்தல்கள் போன்ற 09 தலைப்புக்கள் ஊடக சுயாதீனத்துவம் என்ற பகுதிக்கூறுக்குள் உள்ளடங்கும். குறித்த பகுதிக்கூறுக்குள் உள்ளடங்கும் ஒரு நிகழ்வு டிசம்பர் மாதத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளது.**

**அட்டவணை 03 : 2021 டிசம்பர் : ஊடக சுயாதீனத்துவம்– நிகழ்வு –1**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஊடக நிறுவனத்திற்குள் ஊடகவியலாளர்களின் சுயாதீனத்துவம் / அரசியல் தாக்கம் | 01 |
| **மொத்தம்** | **01** |

1. **லேக் ஹவுஸ் டிஜிட்டல் ஊடக பிரிவின் தலைவர் மஞ்சுள சமரசேகரவை காரணமின்றி பணி இடைநீக்கம் செய்தமை குறித்து சுதந்திர ஊடக இயக்கம், வெகுசன ஊடக அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளமை.**

லேக் ஹவுஸ் மனிதவளப் பணிப்பாளரிடமிருந்து 2021 நவம்பர் 25 ஆம் திகதியிடப்பட்ட கடிதம்மூலம் மஞ்சுள சமரசேகரவிற்கு இந்தப் பணி இடைநிறுத்தம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இடைநிறுத்தம் மேற்கொள்வதற்கான எவ்வித காரணமும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை.எனவும் மேலும் ஊடகவியலாளர் இது தொடர்பில் வினவி லேக்ஹவுஸ் நிருவாகத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பியபோதிலும் அதற்கு எந்தவித பதிலும் கிடைக்கவில்லை என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் ஊடக அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது.

அரச ஊடக நிறுவனமொன்று குறைந்தபட்ச ஊழியர் உரிமைகளை மதிப்பளிக்காமல் செயற்படுவதானது மிக்க கவலையளிக்கும் செயற்பாடாகும் எனக் குறிப்பிடும் சுதந்திர ஊடக இயக்கம், நடைபெற்றுள்ள அநீதி தொடர்பில் நீதியை பெற்றுக்கொடுக்குமாறு வெகுசன ஊடக அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆதாரம்: குறித்த அறிக்கை

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்

**ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டரீதியான கட்டுப்பாடுகள் மற்றும் சட்டவிதிகள் பகுதிக்கூறுக்குள் உள்ளடங்கும் 06 நிகழ்வுகள் டிசம்பர் மாதத்திற்குள் அடையாளம் காணப்பட்டன. ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தி மத, இன பேதங்களைத் தோற்றுவிக்கும், வன்மத்தை தூண்டும் வகையில் கருத்து வெளியிட்டதாகக் கூறி மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலிக்கு எதிராகப் பயங்கரவாத தடுப்புச் சட்டம் மற்றும் ICCPR சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கின் அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் அவரை விடுவித்து விடுதலை செய்யக் கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்பளித்தமையானது அரசு உரிய சட்டங்களை தவறாகப் பயன்படுத்தியமைக்கு வலுவான எடுத்துக்காட்டாகும். கவிதைத் தொகுப்பை வெளியிட்டதற்காகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 18 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னாப் ஜஸீமுக்கு மேல் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டுள்ளமை.**

## அட்டவணை 04 – 2021 டிசம்பர் : சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்– 06 நிகழ்வுகள்

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 04 |
| சட்ட சீர்திருத்த முன்மொழிவுகள் | 01 |
| தகவலறியும் உரிமை | 01 |
| **மொத்தம்** | **06** |

1. **ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தி மத, இன பேதங்களைத் தோற்றுவிக்கும், வன்மத்தை தூண்டும் வகையில் கருத்து வெளியிட்டதாகக் கூறி மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலிக்கு எதிராகப் பயங்கரவாத தடுப்புச் சட்டம் மற்றும் ICCPR சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கின் அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் அவரை விடுவித்து விடுதலை செய்யக் கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்பளித்தமை.**

மேற்படி சட்டங்களின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்களிலிருந்து அசாத் சாலியை விடுவித்துக் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

மார்ச் 9, 2021 அன்று செய்தியாளர் மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, "மத, இன பேதங்களைத் தோற்றுவிக்கும், வன்மத்தை தூண்டும் வகையில் கருத்து வெளியிட்டமை" என்ற குற்றச்சாட்டில் ஆசாத் சாலி மார்ச் 16 அன்று குற்றவியல் விசாரணை திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டதுடன் வழக்கு விசாரணை முடிவுக்கு வரும் வரை அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

இது தொடர்பில் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுச் சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்ததாவது, இந்த வழக்கு தீர்பானது "அரசியல் அதிகாரிகள் எவ்வாறு சட்டத்தைத் தவறாக உபயோகிக்க முயற்சிக்கிறார்கள் என்பதைக் காட்ட ஒரு சிறந்த வாய்ப்பாகும்" எனக் குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதாரம்: 1. http://www.dinamina.lk
2. சுதந்திர ஊடக இயக்கத்தின் அறிக்கை

2. **கவிதைத் தொகுப்பை வெளியிட்டதற்காகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 18 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னாப் ஜஸீமுக்கு மேல் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டுள்ளமை.**

மே 16, 2020 முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அஹ்னாப் ஜசி மை 2021 டிசம்பர் 15 ஆம் திகதி புத்தளம் மேல் நீதிமன்றத்தால் மாதத்திற்கு இருமுறை புத்தளம் பொலிஸ 'ில் ஆஜராகுதல் (கையொப்பம் இடல்), மற்றும் வெளிநாட்டுப் பயணத்தைத் தடை போன்ற நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டார். தாம் கைது செய்ததன் மூலம் தம்முடைய அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகக் கூறி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு டிசம்பர் 8ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அவருக்குப் பிணை வழங்குவதற்கு தமக்கு ஆட்சேபனை இல்லையெனச் சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தார்.

குற்றஞ்சாட்டப்படாமல் ஒரு வருடத்திற்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னாப் ஜஸீம், 2021 மே 12 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி அவருக்கு எதிராகப் புத்தளம் மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அடிப்படை மனித உரிமைகள் வழக்கு மார்ச் 8, 2022 திகதி அன்று மீண்டும் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

ஆதாரம்: https://www.vikalpa.org

3. **சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கண்டி மனித உரிமைகள் காரியாலயத்தினால் நடத்தப்படவிருந்த நினைவேந்தல் கூட்டம் பொலிஸாரால் பெறப்பட்ட நீதிமன்ற உத்தரவினால் தடைசெய்யப்பட்டமை.**

டிசெம்பர் 11 ஆம் திகதி நிகழ்வை நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த இந்த நிகழ்வு நடைபெற்றிருந்தால் 'வெவ்வேறு இனங்களுக்கிடையில் ஒற்றுமையின்மை' ஏற்படக்கூடும் எனக் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 106 (1) பிரிவின் கீழ் கண்டி பொலிஸார் கண்டி மேலதிக நீதவான் நீதிமன்றில் இந்தத் தடை உத்தரவைப் பெற்றுள்ளனர்.

"நீதவான் நீதிமன்றில் ஆஜராகி மற்றும் மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரைச் சந்தித்து, இந்த மனித உரிமைகள் தினக் கொண்டாட்டம் மற்றும் அதன் பின்னணி குறித்து மேலதிக தகவல்களை வழங்கியிருந்த போதிலும், நீதிமன்ற உத்தரவில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை." என்ற காரணத்தினால் குறித்த நிகழ்ச்சி இடைநிறுத்தப்பட்டதாகவும் அது குறித்து விரிவான தரவுகளை விளக்கமளித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள கண்டி மனித உரிமைகள் காரியாலயம் இது தொடர்பில் தெளிவுபடுத்துயுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆதாரம்: https://sinhala.srilankabrief.org

4. **லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் கீர்த்தி ரத்நாயக்கவை எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை.**

இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தாக்கப்படலாம் என்ற எச்சரிக்கையின் பேரில் 2021 ஆகஸ்ட் 17 ஆம் திகதி கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கீர்த்தி ரத்நாயக்க கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி உபுல் குமாரப்பெரும, தனது கட்சிக்காரருக்கு எதிரான குற்றச்சாட்டைத் தொடர முடியாது என்பதால் சந்தேகநபரை அனைத்து குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்குமாறு நீதிமன்றில் கோரிக்கை விடுத்ததுடன் மேலும் இந்தக் கோரிக்கையை எதிர்வரும் வழக்கு விசாரணை திகதி அன்று கொழும்பு கோட்டை நீதவான் பிரியந்த லியனகே அவர்களால் கருத்தில் கொள்ளப்படவுள்ளது.

இந்தக் கைது நடவடிக்கைக்கு எதிராகக் கீர்த்தி ரத்நாயக்க

உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவையும் தாக்கல் செய்துள்ளார்.

ஆதாரம்: https://www.dailymirror.lk

5. **பொலிஸ் தலைமையகம் மற்றும் 03 பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகங்களின் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு பொலிஸ் தலைமையகத்திற்கு தெரிவித்துள்ளமை.**

ஊடகவியலாளர் ராகுல் சமந்த ஹெட்டியாராச்சி தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு மேற்கொண்ட மேன்முறையீட்டில் (RTIC / Appeal 255/2021) அளிக்கப்பட தீர்மானத்திற்கு அமைய உரிய தகவல்களை வழங்கத் தவறியமை தொடர்பில் தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ஆணைக்குழுவின் உத்தரவை தாமதமின்றி செயல்படுத்தி அதனை அறிவிக்கும்படி அல்லது சட்டத்தின் பிரிவு 39/4 இன் விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் , 39(1) இ மற்றும் 39(3) பிரிவின் படி ஆணையத்தின் உத்தரவுகளை மீறும் அதிகாரிகள்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆணைக்குழுவின் செயல் இயக்குனர் கையொப்பமிட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளது:

ஆதாரம்: https://ceylonnews24.com

6. **ஆபாச பிரசுரங்களை தடை செய்யும் சட்டமூலட்டமூலம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ரத்து செய்யப்பட்டுள்ளது.**

நீதி அமைச்சின் செயலாளர் கையொப்பமிட்ட அறிவிப்பில், டிசம்பர் 24, 2021 இல் வெளியிடப்பட்டு அமுலுக்கு வந்த வர்த்தமானி அறிவித்தல் 2021 டிசம்பர் 27 முதல் ரத்து செய்யப்பட்டதுடன் , திருத்தப்பட்ட வரைவு அமைச்சரவையில் மீண்டும் சமர்ப்பிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட சட்டம் இயற்றுவதற்கு நீதி அமைச்சு ஆர்வம் செலுத்தியமைக்கு காரணமாக அமைந்தது சிறார்களின் நலன் மற்றும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகும் பெண்களின் தனியுரிமையைக் பாதுகாக்க சட்டம் இயற்றுவதே அன்றி கருத்துச்சுதந்திரத்தை இடையூறு மேற்கொள்ளும் நோக்கத்திற்காக அல்ல எனக் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கதாகும்.

சிவில் அமைப்புக்கள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், குற்றவியல் சட்ட மறுசீரமைப்பு உபகுழு மற்றும் ஆர்வமுள்ள தரப்பினரின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் திருத்தப்பட்ட வரைவை அமைச்சரவைக்கு அனுப்புமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளதாக நீதி அமைச்சின் செயலாளர் மேலும் குறித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆதாரம்: https://www.lankadeepa.lk

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள் "ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் டிசம்பர் மாதத்தில் ஆறு சம்பவங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இரு நாடாளுமன்ற உறுப்பினர்களின் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கை காரணமாக கருத்துச் சுதந்திரம் மீறப்பட்டுள்ளதாக அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் தீர்ப்பானது குறிப்பிடத்தக்கது.**

**அட்டவணை 05–2021 டிசம்பர் கட்டமைப்புரீதியான விதிமுறைகள் –05 நிகழ்வுகள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 05 |
| **மொத்தம்** | **05** |

1. **பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்த கருத்து காரணமாக அவர் சிறையில் அடைக்கப்பட்டதன் விளைவாக அவரது உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகப் அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் தீர்மானித்துள்ளது.**

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக நான்கு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த வழக்கு அடிப்படை வழக்கு விசாரணை சட்டக் கொள்கைகளின்படி நடைபெறவில்லை என்றும் அதாவது, மேல்முறையீடு செய்ய வாய்ப்பு வழங்காமல் சட்டத்தில் குறிப்பிடப்படாத கேள்விக்குரிய குற்றங்கள்குறித்து உச்ச நீதிமன்றம் ஒரு முறை மட்டுமே விசாரித்து, கடுமையான தண்டனையை விதித்துள்ளது என்பதை குறித்த தீர்ப்பானது தெளிவுபடுத்துகின்றது.

ஆதாரம்: https://www.ipu.org

2. **ரிசாத் பதியுதீனின் கைது தொடர்பில் அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியம் தனது அவதானத்தை செலுத்தியுள்ளமை.**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ரிஷாத் பதியுதீனின் கைது மற்றும் தடுப்புக்காவலில் தடுத்து வைக்கப்பட்டமை குறித்து நவம்பர்

30ஆம் திகதி மட்ரிட்டில் நடைபெற்ற அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் 208ஆவது அமர்வில் விரிவாகப் பேசப்பட்டு டிசம்பர் 16ஆம் திகதி முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டு 6 மாதங்களுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதிலும் அவருக்கு எதிராக எந்தவொரு ஆதாரத்தையும் பொலிசார் முன்வைக்கத் தவறிவிட்டதாக வலியுறுத்தியுள்ள குறித்த ஒன்றியம், பயங்கரவாதத் தடைச் சட்டம் அதன் தற்போதைய வடிவில் அமுல்படுத்தப்படுவது கவலையளிக்கிறது என்பதாகவும், அதனைத் திருத்தம் மேற்கொள்ள அல்லது ரத்து செய்வது தொடர்பில் இலங்கை அரசாங்கத்திடமிருந்து பதிலை எதிர்பார்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ரிசாட் பதியுத்தீன் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணை செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை தொடர்பிலும் குறித்த ஒன்றியம் தனது கவலையைக் தெரிவித்துள்ளது.

ஆதாரம்: 1. https://www.ipu.org 2. https://theleader.lk

3. **பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து கைதிகளின் விவரங்களையும் வழங்குமாறு மனித உரிமை ஆர்வலர்கள் சிலர் தகவலறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளமை.**

இந்தத் தகவல் கோரிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளித்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அருட்தந்தை மாரிமுத்து சத்தியவேல், அனைத்து மதங்களையும் பிரதிநிதிப்படுத்தும் சிவில் அமைப்புகளின் பலர் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் தீமையை / கொடுங்கோன்மையை சுட்டிக்காட்டி சட்டமா அதிபரிடம் கடிதமொன்றை கையளித்ததாக அவர் அங்கு மேலும் கருத்து தெரிவித்தார்.

மேலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுதலை செய்யுமாறும் இதன் ஊடாகக் கோரிக்கை விடுத்ததாக அவர் அங்குக் குறிப்பிட்டார்.

ஆதாரம்: https://english.theleader.lk

4. **இலங்கை தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி உபாலி அபேரத்ன நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒன்பது சிவில் சமூக அமைப்புகள் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.**

இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நீதிபதி பல்வேறு குற்றங்களுக்குக் குற்றச்சாட்டப்பட்டவர் என்பதாலும், காணாமல்போன ஆட்கள்பற்றிய அலுவலகத்தின் தலைவர் என்பதாலும், 12வது பிரிவின் கீழ் இலங்கை தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் தலைவர் பதவியை வகிக்க அவர் தகுதியற்றவர் என்பதனால் இந்த நியமனம் சட்டத்தின் நோக்கங்களுக்கு முரணானது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் கட்டமைப்பு , "நாட்டின் சிறுபான்மையினருக்கு சரியான பிரதிநிதித்துவத்தை வழங்கத் தவறிவிட்டதால், சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் பாதுகாக்கத் தவறிவிட்டது" என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆதாரம்: https://srilankabrief.org

5. **உள்நாட்டு மனித உரிமை ஆணைக்குழுவிற்கான ஐக்கிய நாடுகளின் நிறுவனமான (GANHRI) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை A தரத்திலிருந்து B தரத்திற்கு தரமிறக்கியுள்ளமை.**

1993 இல் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கான பாரிஸ் கோட்பாடுகளின் கீழ் இந்த முடிவு எடுக்கப்பட்டது, மேலும் அரசியலமைப்பின் 20 வது திருத்தத்தின் மூலம் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சுயாதீனத்துவத்தை ரத்து செய்தமையானது இந்தத் தர இறக்கத்திற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும்என மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) கைதுசெய்யப்பட்டு போலிஸ் காவலில் இருக்கும் நபர்களின் மரணங்கள் மற்றும் காவலில் உள்ள சந்தேகநபர்களுக்கு சித்திரவதைகளை விதித்தல் உட்பட அனைத்து மனித உரிமைகள் பிரச்சினைகளையும் திறம்பட கையாளவில்லை என்றும், சகல மனித உரிமைகளையும் மதிக்கும் மற்றும் ஊக்குவிக்கும் வகையில் தனது கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு இணையான அறிக்கையொன்றை முன்வைக்கவில்லை என்றும், மேலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கட்டமைப்பு இலங்கை சமூகத்தின் பன்முகத்தன்மையை போதுமான அளவு கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

ஆதாரம்: https://sinhala.srilankabrief.org

## நிபுணத்துவம்

**'நிபுணத்துவம்' என்பது ஊடக சுதந்திரம் தொடர்பாகக் கவனிக்கப்படும் ஒரு முக்கிய காரணியாகும்.சிறந்த கல்வியை பெற்ற பத்திரிகையாளர்கள், பத்திரிகையாளர்களின் பணி நிலைமைகள், பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர் குழுவிற்கான சர்வதேச வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துதல், சுய–தணிக்கை, தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் பத்திரிகையாளர்களின் நிபுணத்துவ சுயாட்சி உறுதிப்படுத்தப்படல் மற்றும் பத்திரிகையாளர்களின் சமூக பங்குபற்றிய புரிதல் போன்ற ஆறு காரணிகளும் இந்தக் குறிகாட்டியை பிரதிநிதிப்படுத்துகின்றது. டிஜிட்டல் ஊடகவியலாளர்களைத் நிபுணத்துவம் ரீதியாக ஒழுங்கமைத்தல் மற்றும் அத்துறையில் ஊடகவியலாளர்களின் பங்கேற்புடன் ஒரு நெறிமுறைக் கோட்பாட்டை உருவாக்குவது இந்தக் குறிகாட்டிகளின் உள்ளடங்கும் ஒரு நேர்மறையான வளர்ச்சி போக்காகும்.**

**அட்டவணை 06: 2021 டிசம்பர்: நிபுணத்துவம் – 01 நிகழ்வுகள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பத்திரிகையாளர்கள் மற்றும் ஆசிரியர் குழு சர்வதேச வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துதல் / சுய-தணிக்கை / தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் தொழிற்சங்க சுயாட்சி உறுதிப்படுத்தப்படல் / பத்திரிகையாளர்களின் சமூக பங்குபற்றிய புரிதல் | 01 |
| **மொத்தம்** | **01** |

1. **சுதந்திர ஊடக இயக்கத்தின் தலைமையில் "உயர் தொழில்முறை பயிற்சியுடன் டிஜிட்டல் ஊடகவியலாளருக்கான நெறிமுறைகள்குறித்த ஒருமித்ததொறு அடிப்படை ஒப்பந்தத்தை உருவாக்கியமை மற்றும் டிஜிட்டல் ஊடகவியலாளர்களை ஒன்றிணைத்தல் திட்டத்தை ஒழுங்கமைக்கத்தல் "போன்ற டிஜிட்டல் ஊடகவியலாளர்களின் உரிமைகள் தொடர்பான அடிப்படை நடவடிக்கைகள் ஆரம்பித்துவைக்கப்பட்டமை.**

   டிஜிட்டல் ஊடகவியலாளர்களின் நிபுணத்துவ அல்லது தொழில்முறை ரீதியாக ஒன்றிணைத்தலுக்கு தேவையான ஏற்பாடுகளைத்தயாரித்தல் மற்றும் தரமான டிஜிட்டல் ஊடகத்திற்கான நெறிமுறைகள்பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உருவாக்குதல் போன்ற அடிப்படை விடயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

   டிஜிட்டல் ஊடக நெறிமுறைகள் தொடர்பான சர்வதேச பிரகடனங்கள் மற்றும் உள்ளூர் நடைமுறைகளை ஆய்வுக்கு உட்படுத்தியதன் பின்னர் உருவாக்கப்பட்ட இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், டிஜிட்டல் ஊடகவியலாளர்களின் விரிவான தொழில்முறை கொள்கைகள் மற்றும் நெறிமுறைகளின் தொகுப்பு எதிர்காலத்தில் பல பங்குதாரர்களின் பங்கேற்பு செயல்முறையின் பின்னர் வெளியிட எதிர்பார்த்துள்ளது.

   டிஜிட்டல் ஊடகவியலாளர்களின் தொழிற்சங்கத்தை உருவாக்கத் தற்காலிக ஒருங்கிணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

**அட்டவணை 7: ஊடக சுதந்திரம் : 2021 ஜனவரி முதல் நவம்பர் வரை சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகூறுகள் – குறிகாட்டிகள் | 2021 ஜனவரி – நவம்பர் | | 2021 டிசம்பர் |
|---|---|---|---|
| | புதிய நிகழ்வுகள் | முன்னைய நிகழ்வுகளின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 48 | | 05 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 42 | 04 | 04 |
| ஊடக சுயாதீனத்துவம் | 02 | | - |
| ஊடக சுதந்திரம் தொடர்பான புதிய ,முக்கிய போக்குகள் | 01 | | - |
| கட்டமைப்பு ரீதியான நிபந்தனை | 09 | | 03 |
| நிபுணத்துவம் | 01 | | 01 |

2021 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை ஜனவரி-நவம்பர் வரை இங்கு பார்வையிடவும்

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன். அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாகவே காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும். இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


## Free Media Movement

Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995
Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25